செய்தி வெளியீடு எண்: 151 நாள் : 03.03.2016

# செய்தி வெளியீடு

சுகாதாரத் துறையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. ஏழை, எளிய மக்கள் உயர்தர சுகாதார வசதிகளை பெறும் வகையிலும், அவர்களை நோய் தாக்காமல் பாதுகாக்கவும் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதோடு நவீன மருத்துவக் கருவிகளும் வழங்கப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் வாழும் அனைவருக்கும் அவர்கள் வசிக்கும் பகுதியின் அருகிலேயே மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 1,765 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 25 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 21 கோடி ரூபாய் செலவில் தொடங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி, அறுவை சிகிச்சை அரங்கம், அல்ட்ரா சோனோகிராம், இசிஜி ஊடுகதிர் இயந்திரம், செமி ஆட்டோ அனலைசர் போன்ற நவீன மருத்துவக் கருவிகளுடன் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டதின்படி படிப்படியாக இவை ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு 129 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக மேம்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது 371 ஊராட்சி ஒன்றியங்களில் 405 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதிகள், ஸ்கேன் வசதி, அறுவை சிகிச்சை அரங்கம், அல்ட்ரா சோனோகிராம், இசிஜி ஊடுகதிர் இயந்திரம், செமி ஆட்டோ அனலைசர் போன்ற நவீன மருத்துவக் கருவிகளுடன் 27 கோடியே 79 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாட்டில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன என்ற நிலை எய்தப்படும். இந்தியாவிலேயே இது போன்று அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடு மட்டுமே என்ற பெருமையை இதன் மூலம் தமிழ்நாடு எய்தும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை உறுதி செய்யப்பட்டுள்ளது.

*****

**வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**
**நாள்:- 3.3.2016.**